## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.
## அசல் வழக்கு எண். 120/2023

2026–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 07–ம் நாள் சனிக்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 07.02.2026 | | |
| பெயர்: | செல்வராஜ் (PW– 2 Cross ) | தகப்பனார் பெயர்: | மணிவேல் |
| கிராமம்: | வாடி | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | விவசாயம் | வயது : | 64/2026 |

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 07.02.2026</u>**

**(ஆரம்பித்த நேரம்– 12.56)**

1. வாதி எந்த சர்வே எண்ணிற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது. என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் வாதி சொத்தை பிரதிவாதிகள் மறித்துள்ளனர், அதற்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் வாதியை வீடு கட்ட கூடாது என்று மறித்தனர். வழக்கு சொத்தின் விஸ்தீரணம், நான்கெல்லை பற்றி எனக்கு தெரியாது.

2. எனது வீடு, வாதியின் வீட்டிற்கு வடபுறம் உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்தின் விஸ்தீரணம், நான்கெல்லை பற்றி எதுவுமே தெரியாமல் வாதியின் வீட்டிற்கு வடபுறம் குடியிருக்கும் காரணத்தால் அவருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது வீட்டிற்கு செல்வதற்கு வாதி, பிரதிவாதிகள் வீட்டிற்கு

இடையே உள்ள சந்தின் வழியாக தான் செல்ல முடியும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

**(முடிவு நேரம்– 13.03)**